# ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர்

## த்வைத வேதாந்தத்தின் ஒரு மகத்தான கருத்துரையாளர்

எழுதியவர் **ஜி.ஆர்.ரகுநாத ராவ்,**

உபன்யாசாதரர் மற்றும் ஹரிதாச சாகித்ய சம்ஹோதகா ஜெயநகர் ஒன்பதாவது பிளாக், பெங்களூர் , 69.

**மொழிபெயர்ப்பாளர்கள் : சி.பி.ஆர்.காமராஜ்**

**ஜானகிராமன்**

த்வைத இலக்கிய அரங்கில் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் அதன்கருத்துரையாளராகவும் விமர்சகராகவும் ஒரு உயர்ந்த இடத்தை அலங்கரிக்கிறார். பலரும் புரிந்து கொள்ளும் விதத்தில் விவாதங்களை தொகுத்து உரைப்பதிலும், விளக்கம் அளித்தலிலும் அவர் அவருடைய முன்னோடிகளான ஸ்ரீ ஜெயதீர்த்தர் மற்றும் ஸ்ரீ வியாச தீர்த்தர் அவர்களின் நடையையே பின்பற்றுகிறார். தெளிவான அர்த்தத்துக்கும், புதிய அணுகுமுறைக்கும் அவருடைய 47 படைப்புகளும் அறியப்படுகின்றன. அவருடைய வாசகர்களின் அறிவுத்திறமைக்கு இணங்க தன்னுடைய உரையை சுருக்கமாக விவரிக்கும் முறையை அவர் பின்பற்றுகிறார்.

ஏற்கெனவே சொல்லப்பட்டதை போல் ஸ்ரீ மாத்வர் மற்றும் ஸ்ரீ ஜெயதீர்த்தரின் படைப்புகளின் உள்ளே நம்மை கொண்டு செல்கிறார். அவருடைய படைப்புகள் த்வைத சித்தாந்தத்தை தெளிவாக அறியக் கூடியதும், முக்கியத்துவம் வாய்ந்ததும், அளவிடமுடியாத மதிப்புள்ளதுமாகும். அவருடைய எழுத்துக்கள் புலவர் / ஆய்வாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும்

அதே சமயத்தில் சாதாரண படிப்பாளிகளும் புரிந்து கொள்ளும் விதமாக அமைந்துள்ளது.

அவருடைய படைப்புகளை கீழே கண்டுள்ளபடி ன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

அவற்றை நாம் தெளிவாகவும் விவரமாகவும் புரிந்து கொள்ளலாம்.

(அ) ஸ்ரீ மாத்வர் பிரம்பசூத்திரம், உபனிஷத் மற்றும் கீதை ஆகியவற்றை முன்மொழிதலுடன், உட்பொருள் விளக்கி எழுதிய பிரஸ்தானதிரையாவை குறித்து இவருடைய நேரடியான விமர்சனம் முதல் பகுதி.

ஸ்ரீ மாத்வரின் படைப்புகள் வேதாந்த தத்துவத்தின் ல நூல்களாக விளங்குகிறது. மேற்கண்ட ல நூல்களின் ல கருத்துக்கள் சாதாரணமாக எளிதில் புரியக்கூடிய வகையில் நேரடியாக விவரிக்கப்பட்டுள்ளது. எல்லாவித கருத்துக்ளையும் முழுமையாக கையாளுவதிலும், விரிவாக விளக்கி சொல்லும் அசாதாரன திறமையும் அவரிடம் அதிகமாக இருந்ததன் காரணமாக, வேதாந்த தத்துவத்தின் பொதுக் கருத்தை தெளிவாக அறிய முடிகிறது. சமஸ்கிருதத்தின் அடிப்படை அறிவும், வேதாந்தத்தின் கலைச்சொற்களையும் அறிந்த ஓர் சாதாரண படிப்பாளியும் ஸ்ரீ மாத்வ சித்தாந்தத்தின் கருத்துக்களை புரிந்துகொண்டு அதன்படி நடக்க, இவருடைய விமர்சனங்கள் மிகவும் எளிமையானதாக உள்ளது. அவருடைய படைப்புகளான ''உபனிஷத் கந்தார்த்தா'' கீதாவிப்ருத்தி'' ''தம்த்ர தீபிகா'' மற்றும் ''நியாயமுக்தாவாளி'' ஆகியவை பிரஸ்தானதிரையாவை குறித்து அவருடைய நேரிடையான விமர்சனங்களாகும்.

(ஆ) ஸ்ரீ வியாசராயரு அவர்களின் படைப்புகளுக்கு தெய்வீக அனுக்கிரகம் கிடைத்தது போல், ஸ்ரீ ஜெயதீர்த்தரின் படைப்புகளுக்கு ஸ்ரீ மத்வாச்சார்யாரின் விமர்சனங்கள் ஒரு தெய்வீக அனுக்கிரகமாக அமைகிறது.

ஸ்ரீ ஜெயதீர்த்தரின் படைப்புகளுக்கு ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தரின் விமர்சனங்கள் முன்னேற்றமானதும் புலமைமிக்கதுமாகும். இவைகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம்.

(i) ஸ்ரீ மத்வர் மற்றும் ஸ்ரீ ஜெயதீர்த்தர் ஆகியோரின் கருத்தக்களுக்கு அவர்களுக்கு பின்னால் வந்த ஆசிரியர்கள் வெளிப்படுத்திய மறுப்புகளுக்கு, உண்டான இவரின் விமர்சனங்கள்.

(ii) ஒவ்வொரு தத்துவ கோட்பாடுகளிலும் த்வைதாவின் நிலையை புரியும்படி விளக்கமாக கூற, ஸ்ரீ மத்வர் மற்றும் ஸ்ரீ ஜெயதீர்த்தர் அவர்களின் பல படைப்புகளில் நிறைந்திருக்கின்ற பல தத்துவ விவாதங்களை அவர் முறையாக ஒன்றுபடுத்தி நமக்கு தருகின்றார். இதை வேறு முறையில் சொல்ல வேண்டும் என்றால், அவருக்கு பல தரப்பட்ட இடங்களில் நிறைந்து இருக்கின்ற எண்ணங்கள் முறையாக ஒன்று சேர்த்து கூற மிகவும் பிரியமாக இருக்கிறார். இவருடைய இந்த தனிபபண்பு அவருடைய மற்ற படைப்புகளான ‘‘கீதார்த்த சங்கிரகா’’ ‘‘பிரமேய சங்கிரகா’’ ‘‘உபனிஷத் கண்தார்த்தா’’ முதலியவற்றில் வெளிப்பட்டு, ஆச்சாரியாவின் பாஷ்யம்

மற்றும் பத்திராயன சுலோகங்களில் பலமாக எடுத்துரைக்கப்படுகிறது. இந்த படைப்பான ‘‘அர்த் சங்கிரகா’’வில் சொல்லப்பட்டு உள்ள கருததுக்களை விளக்குவதற்கு அவரின் முன்னோடிகளின் பலவித கருத்துக்களை பதிவு செய்து மேற்படி அவரின் தனித்தன்மையை நிரூபணம் செய்கிறார். சுலோகங்களுக்கு அவருடைய முன்னோர்கள் கூறிய பலவிதப்பட்ட கருத்துக்களை ஒரே இடத்தில் கூறி அவற்றில் உடன்பாடு காண்கிறார்.

ஸ்ரீ மத்வாச்சார்யாவும் அவருடைய சீடர்களான பத்மநாபதீர்த்தர், திருவிக்ரம் பண்டிதாச்சார்யா, ஜெயதீர்த்தர் மற்றும்ஸ்ரீ வியாசதீர்த்தர் ஆகியோரின் பிரம்ம சூத்திர இலக்கியங்கள் அனைத்தையும் அவர் எடுத்து கையாளுகிறார். பின்னால் வந்த எழுத்தாளர்களான ஸ்ரீ விஜயீந்திர தீர்த்தர் மற்றும் பலரும் அவருடைய கருத்துக்களை நிரூபிக்கின்றனர். சில இடங்களில் நாம் சூத்திரங்களுக்கு அவருடைய சொந்த தனிப்பட்ட விளக்கங்களையும் காண்கிறோம். எனவே, த்வைத எழுத்தாளர்களுக்கு அவருடைய படைப்புகள் பிரம்ம சூத்திர விளக்கங்களுக்கும், தத்துவத்துக்கும் ஒரு சான்றாவணமாக அமைகிறது.

எனவே, இந்த வழியில் ஒரு சாதாரண படிப்பாளி அவருடைய விமர்சனங்களை நன்றாக அறிய முடிகிறது.

‘‘பரிமளா’’ மற்றும் ‘‘சந்திரிகபிரக்ஷா’’ அவருடைய படைப்புகளில் உயர்ந்த இடத்தை வகிக்கிறது. வேதாந்த கருத்துக்களில் த்வைதாவின் நி லையை அறிந்து கொளள, த்வைத பண்டிதர்களும், அத்வைத மற்றும்

விசிஷ்டாத்வைத பண்டிதர்களும், இந்த கிரந்தங்களின் துணையை நாடி சென்று அவர்களின் விமர்சனங்களை மறுமதிப்பீடு செய்து ஒரு முடிவுக்க வருகின்றனர். மேலும் அவருடைய படைப்புக்களான ''தத்வபிரகாஷிகா பாவதீபா'' ''கீதபாஷ்யா பரமேயதீபியா திப்பானி மற்றும் ''பிரகாரநாசின் விமர்சனங்கள்'' புலமை பெற்றவர்களுக்கு ஒரு சரியான தோற்றத்தை அளிக்கிறது.

''ஸ்ரீ வியாசதீர்த்தரின் விமர்சனங்கள்'' பற்றி கூறும்பொழுது, ஸ்ரீ ராகவேந்திரார், அறிவுத் திறனுடைய இரட்டையர்களான ஸ்ரீ வியாசதீர்த்தர் மற்றும் ஸ்ரீ விஜயீந்திர தீர்த்தரின் காலத்தையே பின்பற்றியதை அறிய முடிகிறது. அவர் தன்னுடைய விமர்சனங்களில் எல்லாவிதமான இலக்கியங்களான வேதம், உபனிஷத், பிரம்மசூதத்திரம், மிமாம்ச சூத்திரம், வியாகர்ன சூத்திரம் முதலியவற்றை எடுத்துரைக்கிறார். த்வைத இலக்கியத்தில் மிகப் புலமை வாய்ந்த பண்டிதர்களின் நினைவுகளை புதுப்பிக்கச் செய்யும் அவருடைய மேற்கோள் புத்தகமான ''தந்திர தீபிகா''விலும் இதனை நாம் காணலாம்.

(இ) அவருடைய இதிகாசங்களின் சாராம்சம் பற்றிய கவிதை படைப்புகள் :

மகாபாரதம், நாராயணம், பாகவதம் முதலியவற்றின் சுருக்கங்களை அவர் எடுத்துரைக்கிறார். மிக ஆவலை தூண்டும் மற்றும் அறிவுரை வழங்குகின்ற இந்த இதிகாசங்களின் கதைகளை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தரோ இந்த இதிகாசங்களில் இருந்து தத்துவம் மற்றும் அறநெறியான மிக நுண்ணிய கருத்துக்கைள தேர்ந்தெடுத்து அதை சமஸ்கிருத கவிதைகளில் அழகாக வடிவமைக்கிறார்.

அவர் அறிவாற்றலில் மிகச் சிறந்து விளங்கினாலும், அவர் ஒரு யோக முனிவராகவும் சாதனை படைத்துள்ளார்.

அவருடைய சிறு வயதிலேயே அவர் அக்னிசுக்தத்தை தெய்வ பக்தியுடன் ஒரு முனைப்படுத்தி உச்சரிக்கும் பாங்கிலே அவருடைய மந்திர சித்தி மக்களுக்கு விளங்கியது.

ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் பலதரப்பட்ட அதிசய நிகழ்வுகளை செய்து இருந்தாலும் அவருடைய சிறந்த அதிசயமாக விளங்குவது அவர் நமக்கு விட்டுச் சென்றுள்ள எல்லையற்ற இலக்கியமும், ஸ்ரீ மத்வாச்சாரியாருடைய தத்துவத்தில் அவருடைய பங்குமேயாகும்.

ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர், பல தரப்பட்ட அதிசயங்களை நிகழ்த்தும் பொழுது நான் எந்தவித மாயவித்தையோ, மந்திர வித்தையோ, சூன்ய வித்தையோ செய்யவில்லை என கூறுவதுண்டு. தான் செய்வது பதஞ்சலி யோகம் இல்லை என்றும், பகவத் கீதையின் யோகமே தான் செய்வதாகவும் கூறுகிறார்.

ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் ஒரு சிறந்த நற்பண்புகள் உடையவராகவும் தர்மசிந்தனையுடையவராகவும் கருதப்படுகிறார். அவர் செய்துள்ள பல அதிசய நிகழ்வுகளை அவரின் எண்ணிலடங்கா பக்தர்களே நிரூபிக்கின்றனர்.

சாதாரண மக்கள் செய்த சக்தியின் பேரில் உள்ள நம்பிக்கையை மறு உறுதி செய்யவே அவர் பலதரப்பட்ட அதிசய நிகழ்வுகளை நிகழ்த்தினார். அவரைப்போல் பல நூறு பேர்கள் இருப்பார்கள். நான் அவர்களைப் பற்றி விரிவாக கூறவில்லை. அவர் தன்னுடைய யோக சக்தியினால் பிருந்தாவனத்தை அடைந்தார்.

இந்த ஞானியை பற்றியும், அவருடைய சக்தி, இந்திய தத்துவ இயலில் அவரின் பங்கு, அவரின் சமஸ்கிருத இலக்கியம், மற்றும் த்வைத தத்துவம் பற்றியும் ஒருவர் புத்தகம் புத்தமாக எழுத முடியும்.

இந்த 335 வருடங்களில் அவர் சாதி, மதம் பார்க்காமல் தன்னுடைய கோடிக்கணக்கான ஹரி பக்தர்களுக்கு ஆசீர்வாதத்தை வழங்கி அவர்களின் உடல் மற்றும் உள்ள நோய்களைத் தீர்த்துள்ளார்.

சத்தியம் மற்றம் தர்மத்தின் உருவகமாக திகழும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமி வழிபாடு ஒருவருக்கு அவர் விரும்பும் கற்பக விருக்ஷத்தையும் காமதேனுவையும் வரமாக வழங்கக்கூடியது.

நல்வாழ்விற்கு அவர் ஒரு வாழ்க்கை பலமும், வழித்துணையுமாவார் என்பதை நான் உறுதியுடன் முடிவாகக் கூறுகிறேன்.

அவருடைய பிருந்தாவனத்துக்கு சென்றவர்கள் யாரும் ஏமாற்றம் அடைந்து திரும்பியதில்லை. 1671-ம் வருடம் முதல் இன்றைய தேதி வரையில் அந்த மகான் அவருடைய பிருந்தாவனத்தில் இருந்து கொண்டு அவருடைய பக்தர்களின் வழிபாடுகளுக்கு பதிலளித்து, அவர்களின் ஆசைகளை நிறைவேற்றி, அவரின் பக்தர்ளை மகிழ்ச்சியுற செய்து கொண்டிருக்கிறார்.

துன்பத்திலும் இறுக்கத்திலும் இருக்கும் இந்த காலகட்டத்தில், நம் வாழ்கையின் தீங்குகளில் இருந்து விடைகாண உதவும் ஒரு சஞ்சீவி மருந்து, இடைவிடாமல் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தரின் புகழ் நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பதாகும்.